2008 ஏப்ரல் 29]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகளைப் பற்றி இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கொல்வது—மூடப் பழக்க வழக்கம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில், மனிதனுடைய முந்தைய நிலை, அதாவது Darwin theory பிரகாரம் குரங்கிலிருந்துதான் மனிதன் பிறந்தான் என்ற உறுதிப்பாடு இருக்கின்றது. ஆகவே, நம்முடைய முதாதையர்களாக குரங்குகள் இருப்பதால் அவற்றைக் கொல்வது இல்லை என்ற கருத்துதான் உண்மையான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

180—

அங்கன்வாடி மையம்

***30210—திரு. கோ. அரி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, பட்டாபிராமபுரம் ஊராட்சி, அருந்ததியர் குடியிருப்பில் அங்கன்வாடி மையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதி, பட்டாபிராமபுரம் ஊராட்சியில் இரட்டை மையங்கள் செயல்படுகின்றன. பட்டாபிராமபுரம் ஒன்று மற்றும் இரண்டு என உள்ளன. இதில் இரண்டாவது மையத்தில் அருந்ததியர் காலனியில் உள்ள 15 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். அதுவும் இது அருந்ததியர் காலனியில் இருந்து அரை கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே உள்ளது. அதனால், புதிய மையம் ஏற்படுத்தித் தருவது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், பட்டாபிராமபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட அருந்ததியர் காலனியில் இருந்து சுமார் 20-க்கும் மேற்பட்ட குழந்தைகள் அந்த பட்டாபிராமபுரம் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில், அந்த ஊருக்குச் செல்வதற்குப் போதுமான சாலை வசதியும் இல்லை. எனவே, அங்கே இருக்கின்ற குழந்தைகள் அவ்வளவு தூரம் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினால், அங்கே இருக்கின்ற அந்த அருந்ததிய மக்களுடைய குழந்தைகளின் நலன் கருதி அந்தப் பகுதியிலேயே ஒரு அங்கன்வாடி மையத்தை ஏற்படுத்தித்தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இடம் அளித்தால் நிச்சயமாக அரசு இதுகுறித்து பரிசீலிக்கும்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) Second Question கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) சொல்லுங்கள். One minute. வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே அரசுக்குச் சொந்தமான நிலங்கள் நிறைய இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் போதுமான அளவுக்கு அங்கிருந்து செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றபட்சத்தில் அங்கே ஒரு சிறப்பு அனுமதி தந்து அந்த அருந்ததி இன மக்களுடைய குழந்தைகள் பயில்வதற்கு அந்த அங்கன்வாடி மையத்தை அரசு கண்டிப்பாக ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 ஏப்ரல் 29]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கூறியவாறு இடம் இருந்தால், இந்த வருடம் முதன்முறையாக நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கட்டாயமாக குழந்தைகள் மையம் கட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதனைக் கருத்தில்கொண்டு அவர்கள் இடம் கொடுத்தால் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ஒரு அங்கன்வாடி மையத்தைக் கட்டிக்கொள்ளலாம். அதற்கு அரசு சிறப்பு அனுமதி அளிக்கும் எனத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) ஒரே ஏவுகணையில் 10 செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பிய சாதனைக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நேற்றையதினம் 28–4–2008 அன்று இந்திய விஞ்ஞானிகளால் உலகிலேயே முதல்முறையாக ஒரே நேரத்தில் 10 செயற்கைக்கோள்களுடன் இந்தியாவின் PSLV C 9 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இது இந்திய விண்வெளி வரலாற்றில் மாபெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. இம்மகத்தான பணியில் ஈடுபட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவருக்கும், விண்வெளி விஞ்ஞானிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், பேரவையின் சார்பாகவும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)